**வாக்குமூலம்**
**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,**
**மேட்டூர்,**
**தேதி: 17.03.2026**
**OS. No. 286/2015**
**வழக்கு சாட்சி PW.1– ரத்தினசாமி, த/பெ.சின்னப்ப கவுண்டர்**

(சாட்சி சத்தியப்பிரமாணம் செய்து பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார் )

**<u>பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி :</u>**

18) 13.03.2002 ன் பாகபிரிவினை பத்திரத்தின் அசலை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். அந்த பாகபிரிவினை பத்திரத்தில் பிரதிவாதிகள் தரப்பினர்கள் இல்லை என்றால் சரிதான். அதில் பிரதிவாதிகள் சாட்சி கையெழுத்து கூட செய்யவில்லை என்றால் சரிதான். அது எங்கள் குடும்ப உறுப்பினர்களுக்குள் ஏற்படுத்திக்கொண்டது என்றால் சரிதான். அந்த பத்திரம் குறித்து நான் பிரதிவாதிகளுக்கு எதுவும் சொல்லவில்லை என்றால் சரிதான். அந்த பத்திரத்தில் பிரதிவாதிகளின் உரிமைகள் குறித்து ஏதேனும் எழுதப்பட்டுள்ளதா என்றால் இல்லை. அவ்வாறு ஏதேனும் எழுதப்பட்டிருந்தால் அவர்களை கட்டுப்படுத்துமா என்றால் கட்டுப்படுத்தும்.

19) என்னுடைய உரிமை குறித்து மாதப்பன் வகையறா அவர்கள் குடும்பத்திற்குள் ஏதேனும் பத்திரம் எழுதியிருந்தால் அது என்னை கட்டுப்படுத்துமா என்றால் கட்டுப்படுத்தாது. வா.சா.ஆ.1 பாகபிரிவினை பத்திரத்தில் தரப்பினராக உள்ள சண்முகம் என்பவர் இந்த வழக்கு சொத்து குறித்து இதே நீதிமன்றத்தில் இந்த பிரதிவாதிக்கு எதிராக அ.வ.எண்.9/2015 என்ற வழக்கு தாக்கல் செய்த விவரம் தெரிந்து கொண்டேனா என்றால் இல்லை. இதே பாகபிரிவினை பத்திரத்தை அந்த வழக்கில் வா.சா.ஆ.10 ஆக குறியீடு செய்துள்ளார்கள் என்றால் எனக்கு தெரியாது. அந்த வழக்கில் அந்த பாகபிரிவினை பத்திரம் இந்த பிரதிவாதிகளை கட்டுப்படுத்தாது என்று தீர்ப்பாகியுள்ளது என்றால் எனக்கு தெரியாது. இந்த வழக்கின் பிரதிவாதி மாதப்பன் 11.08.2016 ல் தாக்கல் செய்த பதிலுரையை படித்து பார்த்தேனா என்றால் பார்த்தேன்,

தற்போது நினைவில்லை. அந்த பதிலுரையை தாக்கல் செய்த பிறகு மேற்படி மாதப்பன் இறந்துவிட்டார் என்றும், அவரது வாரிசுகளை சேர்த்து நான் வழக்கை திருத்தினேன் என்றால் நான் திருத்தவில்லை.

20) நான் படித்து பார்த்ததாக சொல்லும் பிரதிவாதி மாதப்பன் தாக்கல் செய்த பதிலுரையை எதிர்த்து நான் எதும் எதிர் பதிலுரை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ.1 பாகபிரிவினை குறித்தும், அ.வ.எண்.9/2005 குறித்தும் குறிப்பாக பிரதிவாதி மாதப்பன் அவருடைய பதிலுரையில் சொல்லிய விவரம் எனக்கு தெரியும் என்றும், தற்போது நினைவில்லை என்று பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. அந்த வழக்கில் நான் தரப்பினராக இல்லை என்பதால் அந்த பத்திரத்தில் சம்மந்தப்பட்ட சுப்ரமணி மற்றும சண்முகம் என்னை கைசேர்த்து கொண்டு இந்த வழக்கை என்னை வைத்து தாக்கல் செய்துள்ளார்கள் என்றால் சரியல்ல.

21) ஏற்கனவே முடிந்துபோன சமாச்சாரத்தை பொறுத்து மீண்டும் அந்த வழக்கில் நான் தரப்பினர் அல்ல என்பதால் இந்த வழக்கை என்னை வைத்து தாக்கல் செய்ய உரிமையில்லை என்றால் சரியல்ல. இந்த வழக்கில் கோரியுள்ள பரிகாரத்தை திசைதிருப்பவேண்டி வா.சா.ஆ.1 பாகபிரிவினை பத்திரத்தின் மூலம் நான் C செட்டியூல் சொத்தைஅடைந்ததாகவும் எனக்கு பட்டா வழங்கப்பட்டுள்ளதாகவும், ச.எண்.1052/1ல் சுவாதீனத்தில் உள்ளதாக சொல்லி தேவையில்லாமல் கொழப்புவதற்காக என் வாதத்தை முன் வைத்துள்ளேன் என்றால் சரியல்ல. நாங்கள் தாக்கல் செய்த மாதிரி வரைபடமானது எங்கள் விருப்பத்திற்கேற்ப தயார் செய்யப்பட்டது என்றும், அவ்வாறு பூமியில் நிலையில் சொத்துக்கள் இல்லை என்றால் சரியல்ல. அதனால் தான் அந்த மாதிரி வரைபடத்தை பிரதிவாதிகளுக்கு குறிப்பாக பதிலுரையில் சொல்லியபோதும் இதுவரை சார்வு செய்யவில்லை என்றால் சரியல்ல.

22) நான் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ.5 மாதிரி வரைபடத்தில் A, B என்று எந்த இடத்தில் ஆரம்பிக்கிறது என்று தெரியுமா என்றால் தெரியாது. அது முடியும் இடத்தில் என்ன குறிப்பு காண்பித்துள்ளோம் என்று தெரியுமா என்றால் தெரியவில்லை. சண்முகம் என்பவர் என் உடன் பிறந்த சகோதரர் என்றால் சரிதான். பெரியசாமி என்பவர் செல்லப்பகவுண்டரின் மகன் என்றால் சரிதான். அவர்களிடம் நான் 03.05.2002 ல் ஒரு தடவழி பாத்தியம் ஏற்படுத்தியதாக சொல்லியுள்ள வா.சா.ஆ.2 ஆவணத்திலும் பிரதிவாதிகள் தரப்பினர்கள் இல்லை என்றும், சாட்சி கூட இல்லை என்றால் சரிதான்.

23) அ.வ.எண்.9/2005 என்ற வழக்கானது பெரியசாமி மற்றும் சண்முகம் தான் மாதப்பன் என்பவர் மீது தாக்கல் செய்தார்கள் என்றால் அவர்களை தான் கேட்கவேண்டும். எதிர்வழக்குரையில் சொல்லியபிறகாவது மேற்கண்ட வழக்கு குறித்த விவரங்கள் உண்மையா என்பது குறித்து முயற்சிகள் எடுக்கவில்லை என்றால் சரிதான். அந்த வழக்கு 23.08.2013 ம் தேதியன்று முழு விசாரணைக்கு பிறகு தள்ளுபடி செய்யப்பட்டது என்றும், அதை எதிர்த்து இன்றைய தேதி வரை எவ்வித மேல்முறையீடும் செய்யப்படவில்லை என்றால் எனக்கு தெரியவில்லை. சண்முகம் மற்றும் பெரியசாமி இருவருமே வா.சா.ஆ.1 மற்றும் வா.சா.ஆ.2 ஆவணங்களுக்கு சம்மந்தப்பட்டவர்கள் என்றால் சரிதான். அந்த ஆவணங்களில் கண்ட நபர்கள் அந்த ஆவணத்தை முன் வைத்து தாக்கல் செய்த வழக்கில் பிறப்பிக்கப்பட்ட வழக்கு என்னையும் கட்டுப்படுத்தும் என்றால் சரியல்ல. பிரதிவாதி வழக்கு சொத்திற்கு மூன்றாம் நபர் என்று நான் சொல்லியுள்ளது தவறு என்றால் சரியல்ல.

24) ச.எண்.1052/2, 1051/2 ஆகிய சொத்துக்களை இந்த வழக்கில் காட்டியுள்ளேன் என்றால் சரிதான். அந்த சொத்துக்களில் இந்த பிரதிவாதிகளுக்கு உள்ள உரிமைகள் குறித்து அ.வ.எண்.9/2005 என்ற வழக்கில் விளக்கமாக தீர்வு கூறப்பட்டுள்ளது என்றும், அது என்னையும் கட்டுப்படுத்தும் என்றால் சரியல்ல. அந்த தீர்ப்பை

முறியடிக்க வேண்டும் என்ற எண்ணத்தில் உண்மையை மறைத்து இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. என் சொத்தை பிரதிவாதிகள் என்றாவது விலைக்கு கேட்டார்களா என்றால் இல்லை. அவ்வாறு இந்த வழக்கில் சொல்லியிருந்தால் அது தவறு என்றால் சரியல்ல.

25) நீதிமன்ற ஆணையர் தாக்கல் செய்த அறிக்கை மற்றும் வரைபடம் தவறு என்று மறுப்பு நான் தெரிவிக்கவில்லை என்றால் சரிதான், அது சரியாகத்தான் இருந்தது. ச.எண்.1051/2 ல் பிரதிவாதிகளுக்கு பங்கு உள்ளது என்றால் சரியல்ல. சண்முகம், சுப்ரமணி, நானும், மாதப்பன் மற்றும் தங்கராஜ் ஆகியோர்கள் சேர்ந்து 23.11.2004 ல் பொதுவண்டிப்பாதை ஒப்பந்தம் ஒன்று ஏற்படுத்திக்கொண்டோம் என்றால் சரியல்ல. ச.எண்.1052/2 ல் கிணறு இருந்தது என்றால் இருந்தது. அந்த கிணறு மற்றும் தடவழி குறித்து தான் ஒப்பந்தம்ஏற்படுத்தப்பட்டது என்றால் சரியல்ல. கிணறு தற்போது நிலையில் இல்லை என்றால் சரியல்ல, மின் இணைப்புடன் உள்ளது.

26) ச.எண்.1052/2 ல் உள்ள கிணறு மற்றும் வண்டிப்பாதை குறித்து ஏற்பட்ட ஒப்பந்த அடிப்படையில் இந்த பிரதிவாதிக்கு பாதி பங்கு உள்ள கிணற்றை மூடிக்கொள்ளவேண்டும் என்றும், அதற்காக அதில் வண்டித்தடம் உரிமை, தண்ணீர் குழாய் பதிக்கும் உரிமை ஆகியவை அந்த பத்திரத்தின் வாயிலாக வழங்கப்பட்டது என்றால் சரியல்ல. அதன் அடிப்படையில் அந்த கிணற்றை மூடிய பிறகு குழாய் பதித்த பின் அதை முழுமையாக அனுபவிக்கவிடாமல் அ.வ.எண்.9/2005 என்ற வழக்கை விளம்புகை மற்றும் தடையுறுத்து மற்றும் செயலுறுத்துக்கட்டளை பரிகாரம் கேட்டு சுப்ரமணி மற்றும் சண்முகம் இருவரும் இறந்துபோன மாதப்பன் மற்றும் அவரது மகன் சுப்ரமணி மீது வழக்கு தாக்கல் செய்தார்கள் என்றும், அந்த வழக்கில் தீர்புரையில் குறிப்பாக 23.11.2004 தேதியன்று கிணறு மற்றும் வண்டிப்பாதை சம்மந்தமாக பஞ்சாயத்து பேசி ஒப்பந்தம் எழுதப்பட்ட சங்கதி உண்மை என்று இந்நீதிமன்றம் தீர்மாணிக்கிறது என்றும், ஆனால் அதன் அடிப்படையில் பி.வா.சா.ஆ 5 ஆவணம்

எழுதப்பட்டதாக பிரதிவாதிகள் தரப்பில் சொல்லப்படும் ஆவணம் வெறும் வெள்ளைதாளில் எழுதப்பட்ட ஆவணம் என்பதால் அது சட்ட செல்லுடமை கொண்ட ஆவணம் என்று எடுத்துக்கொள்ள இயலாது என்றும், அதனால் பிரதிவாதிகள் தரப்பில் கூறுவது போல் ஒப்பந்தம் ஏற்பட்டது என்ற விவரம் பிரதிவாதிகள் சாட்சியத்தின் மூலம் நிரூபிக்கப்பட்டுள்ளதாகவும் இந்நீதிமன்றம் தீர்மாணிக்கிறது என்று தீர்ப்பில் சொல்லியுள்ளதால் அந்த ஒப்பந்த ஆவணத்தை மறுக்க எனக்கு முகாந்திரம் இல்லை என்று சொல்லியுள்ளது என்றால் சரியல்ல.

(குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக வழக்கு 18.03.2026 ம் தேதிக்கு ஒத்திவைக்கப்படுகிறது).

ஓம்/–திரு. M.செல்வம்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேட்டூர்.